
பாிசுத்த பவுல் ஆலயம்
அஹமதி தமிழ் திருச்சபை
2020 ஆம் ஆண்டு
சபையின் வாக்குத்தத்தம்
செய்தி மலர்
2020 ஜனவரி
இதோ, நான்
புதிய காாியத்தைச்
செய்கிறேன்;
ஏசாயா 43:19
இதழ் :9
மலா் :16



# சபை ஊழியரின் அன்பு மடல்



கிறிஸ்துவிற்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும் அனுதின ஜெபமும் அதுவே.

கடந்த டிசம்பர் மாதம் முழுவதும் நம்மை கண்மனி போல வழி நடத்தின தேவன் வரும் புதிய வருடம் ஜனவரி மாதம் முழுவதும் நம்கூட இருந்து நமது திருச்சபையை சகல ஆசீர்வாதங்களையும் தந்து திருப்திபடுத்தி வழி நடத்துவாராக.

சபையோர் அனைவருக்கும் என் சார்பிலும் என் குடும்பத்தின் சார்பிலும் புத்தாண்டு வாழ்த்துக்களையும் ஆசீர்வாதங்களையும் கூறுகிறேன்.

வரும் புத்தாண்டு 2020-ம் ஆண்டிற்கான வாக்குத்தத்தமாக நம் ஆண்டவர் நமக்கு கொடுத்திருக்கிற வசனம் " இதோ நான் புதிய காரியத்தை செய்கிறேன்" (ஏசா-43:10)

ஆம் நம் ஆண்டவர் புதுமைகள் படைப்பதிலே பிரியப்படுகிறவர். நம் சபையில் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் இந்த வருடம் ஆண்டவர் புதிய காரியங்களை செய்வார். அவர் வாக்கு மாறாதவர். என் வாழ்க்கையில் ஒரு மாறுதல் வராதா? பழைய துன்பங்கள் மறைந்து போகாதா? என்னுடைய நோய்கள் மறையாதா? என்னுடைய வேலையில் ஒரு முன்னேற்றம் ஏற்படாதா? என் பணக்கஷ்டம் தீராதா? என் மனபாரங்கள் குறையாதா? என் வாழ்க்கையில் ஒரு மகிழ்ச்சி உண்டாகாதா? என்னுடைய ஏமாற்றங்களுக்கு ஒரு முடிவு ஏற்படாதா? என் துக்கங்கள் மறையாதா? என் ஜெபங்கள் கேட்கப்படாதா? என் ஏக்கங்கள் தீராதா? என்றெல்லாம் மன உளைச்சலோடு காணப்படும் உங்கள் வாழ்க்கையிலே கர்த்தர் இந்த வருஷம் புதிய காரியங்களை செய்வார்.

3 .இனி கீழ்வரும் பகுதிகளிலே எப்படியெல்லாம் ஆண்டவர் புதுமைகளை நம் சபையில் செய்யப் போகிறார் என்பதை தீர்க்கதரிசன செய்தியாக காணலாம்.

## I. புதிய அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்வார்.......

இது வரை நடைபெற்றிராத புதிய அற்புதங்களை நம் சபை மக்கள் பெற்றுக்கொள்ளப்போகிறார்கள். ஆராய்ந்து முடியாத காரியங்களையும் எண்ணிமுடியாத அதிசயங்களையும் நான் செய்வேன் என்று ஆண்டவர் வாக்கு கொடுக்கிறார். (யோபு–9:10) நான் வனாந்திரத்திலே வழியையும் அவாந்திரவெளியிலே ஆறுகளை உண்டாக்குவேன் (ஏசா–43:10) என்று ஆண்டவர் உரைக்கிறார். நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே தேவன் மகா பெரிய அற்புதங்களை செய்வார். (எபேசி–3:20)

அதிசயமாய் உலகத்தை கடவுள் சிருஷ்டித்தபொழுது ஒவ்வொன்றையும் படைத்தவுடனே இது நல்லது என்று சொன்னார். நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் ஜோதிகளின் பிதாவினிடத்தில் இருந்து இறங்கி வருகிறது. மந்த நாவும் திக்கு வாயுமாயிருந்த மோசேயை பெயர் சொல்லி அழைத்து இஸ்ரவேல் ஜனத்திற்கு தலைவராக உயர்த்தியவர், சவுலை தெரிந்துகொண்டு சமஸ்த இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாக்கினவர், ஆடு மேய்த்துக்கொண்டிருந்த தாவீதை ராஜாவாக தெரிந்துகொண்டவர், பெரிய ஞானியாகிய பவுலை சுவிசேஷகனாக மாற்றி அப்போஸ்தலனாக அழகு பார்த்தவர்,

கோழைகளாக பயந்து ஒளிந்து கொண்டிருந்த சீடர்களுக்கு பரிசுத்த ஆவிக்கொடுத்து உலகமெங்கும் சென்று சுவிசேஷம் சொல்ல வைத்தவர், பலவீனனான கிதியோனை தளபதியாக மாற்றினவர், உங்கள் வாழ்க்கையிலும் அநேக அற்புதங்களை நடப்பித்து வரும் 2020–ம் ஆண்டு முழுவதும் அதிசயமாய் புதிய காரியங்களை நடப்பிப்பார். நம் ஆண்டவரால் ஆகாகத காரியம் ஒன்றுமில்லை. நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர் என்னாலே செய்யக் கூடாத அதிசயமான காரியம் ஒன்று உண்டோ என்று ஆண்டவர் உங்களை பார்த்துக் கேட்கிறார்.

நடக்காது என்று நீங்கள் எண்ணின காரியங்கள் எல்லாம் இயேசுவின் நாமத்தில் இந்த வருஷம் கைகூடும். நீங்கள் நினைத்து பார்க்காத கோணத்தில் நீங்கள் நினைக்காத வகைகளில் உங்களுக்கு அற்புதங்கள் நடைபெறும். அல்லேலூயா.

## 2. புதிய பாதைகள் தோன்றும்.........

தடைகளை நீக்கிப் போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்து போகிறார். அவர்கள் தடைகளை நீக்கி வாசலால் உட்பிரவேசித்து கடந்து போவார்கள். அவர்கள் ராஜா அவர்களுக்கு முன்பாக போவார். கர்த்தர் அவர்கள் முன்னணியில் நடந்து போவார் (மீகா-2:13)

ஆம் பிரியமானவர்களே, கடந்த ஆண்டிலே உங்களுக்கு முன்பாக மலைபோல் பிரச்சனைகள் காணப்பட்டிருக்கலாம். நீங்கள் எடுக்கிற முயற்சிகளில் தடை கற்கள் காணப்பட்டிருக்கலாம். நீங்கள் நடந்த பாதைகளில் முட்கள் உங்கள் கால்களை காயப்படுத்தியிருக்கலாம். ஆனால் ஆண்டவர் சொல்கிறார், இந்த ஆண்டிலே உங்கள் எல்லாத் தடைகளையும் தகர்த்துப் போடுவேன் என்று. ஆண்டவருடைய வார்த்தைகளை விசுவாசியுங்கள் உங்கள் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். உங்கள் விசுவாசம் எல்லாத் தடைகளையும் உடைத்து தவிடு பொடியாக்கிவிடும், மலை போல் தோன்றும் எல்லாப்போராட்டங்களையும் சமுத்திரத்திலே அமிழ்த்து போடும்.

செங்கடல் இஸ்ரவேல் ஜனங்களை குறுக்கிட்டபொழுது காற்றை வீச செய்து சமுத்திரத்தை பிளந்து வழியை உண்டாக்கினவர், ஆசாரியர்கள் கால் பட்டவுடனே யோர்தான் நதியை இரண்டாக பிளந்து பாதையை ஏற்படுத்தினவர் உங்கள் வாழ்க்கையில் காணப்படும் தடைகள் எல்லாவற்றையும் தகர்த்துப் போட்டு செம்மையான வழியை உண்டாக்குவார். புதிய பாதைகள் தோன்றும் அதன் வழியே நீங்கள் மகிழ்ச்சியாக நடந்து போவீர்கள். அல்லேலூயா.

இயேசு சொன்னார் நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்று.(யோவா-14:6) அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும் அது பரிசுத்த வழி என்னப்படும். தீட்டுள்ளவன் அதிலே நடந்து வருவதில்லை. அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைக் கெட்டுப் போவதில்லை. அங்கே சிங்கம் இருப்பதில்லை துஷ்டமிருகம் அங்கே போவதுமல்லை. அங்கே காணப்படவும் மாட்டாது. மீட்கப்பட்டவர்களே அதில் நடப்பார்கள். கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி ஆனந்தக் களிப்புடன் பாடி சீயோனுக்கு வருவார்கள். நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின் மேலிருக்கும். சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள். சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம் (ஏசா-35:8-10)

## 3. புதிய கிருபைகள் கிடைக்கும் .

கன்னிகையாகிய மரியாளின் வீட்டிற்குள் தேவதூதன் பிரவேசித்து "கிருபை பெற்றவளே வாழ்க கர்த்தர் உன்னுடனே இருக்கிறார். ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் (லூக்-1:28) என்றான்.

ஆம் ஏழைப்பெண்ணாகிய மரியாளுக்கு தேவன் புதிய கிருபையைத் தந்தார். அதேவிதமாக தகுதியில்லாத நம் ஒவ்வொருவருக்கும் தேவன் புதிய கிருபைகளைக் கொடுத்து எண்ணமுடியாத ஆசீர்வாதங்களை அருள் செய்வார். பவுல் கடந்து சென்ற கஷ்டமான பாதையைக் குறித்து ஆண்டவர் சொல்லும்பொழுது என் கிருபை உனக்கு போதும் உன் பலவீனத்திலே என் பெலன் பூரணமாய் விளங்கும்" (2-கொரி-12:9) என்று சொன்னது போல நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கை பாதையிலும் தேவனுடைய கிருபை பூரணமாய் விளங்கி நிந்தனைகள் போராட்டங்கள் பாடுகள் எல்லாவற்றிலும் ஜெயம் பெற்று கிருபையில் நிலைத்திருக்க ஆண்டவர் அருள் புரிவார். அவர் செயலில் மகத்துவமுள்ளவர் மலைகள் விலகினாலும் பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும் என் கிருபை உன்னை விட்டு விலகாமலும் என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று உன் மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்கிறார். (ஏசா-54:10)

"நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை அவைகள் காலைதோறும் புதியவைகள்" (புலம்-3:22) என்ற வேத வசனத்தின்படி ஒவ்வொரு நாளும் உங்கள் வாழ்க்கையில் புதிய புதிய கிருபைகள் தோன்றும். சோதனைகளில் வெற்றி கிடைக்கும் போராட்டங்களை வென்று ஜெயம் பெறுவீர்கள். சாத்தான் தோற்கடிக்கப்படுவான். நீங்கள் மேலும் மேலும் பெலனடைவீர்கள். நீங்கள் பலுகி பெருகுவீர்கள், கழுகுகளை போல செட்டைகளை அடித்து உயரப்பறப்பீர்கள். ஒரு நாளும் சோர்ந்து போகமாட்டீர்கள். ஒரு போதும் குன்றிப் போக மாட்டீர்கள். கிருபை கிருபை... கிருபை உங்கள் முயற்சிகள், செய்கைகள் எல்லாவற்றிலும் கிருபையைக் காண்பீர்கள். கர்த்தர் உங்களை வர்த்திக்கப்பண்ணுவார். நீங்கள் சம்பூரனமாய் சாப்பிட்டு திருப்தியடைந்து உங்களை அதிசயமாய் நடத்தி வந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள். என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டு போவதில்லை. (யோவேல்-2:26)

ஆம் பிரியமானவர்களே நாம் நிர்மூலமாகதபடி கர்த்தருடைய கிருபை நம்மைத் தாங்கும். கர்த்தருடைய ஆலயத்திலே அமர்ந்து அவருடைய மகத்துவமான கிரியைகளை தியானிப்போம்.

கர்த்தர் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து வரும் 2020-ம் ஆண்டு முழுவதும் புதிய அற்புதங்களை நடப்பித்து அதிசயமாய் புதிய பாதைகளை காண்பித்து புதிய கிருபைகளோடு கூட அனுதினமும் கரம்பற்றி நடத்துவாராக.

கர்த்தரின் பணியில்,

அன்பு சகோதரன்,

S.ஸ்டாலின்

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரனே சகோதரியே இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தில் வாழத்துக்கள் . 2019 ஆம் ஆண்டு முடிந்து 2020 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கவும் இந்த புதிய வருடத்தை காணவும் தேவன் தந்த ஜீவனுக்காக, அவர் தந்த பெலனுக்காக கோடான கோடி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறேன்.

ஆண்டவர் நமக்கு இந்த வருடம் சபைக்கு கொடுத்த வாக்குத்தத்தம்

"இதோ நான் புதிய காரியத்தை செய்கிறேன்" (ஏசாயா 43:19) என்று வாக்குத்தத்தம் செய்கிறார்

நம் தேவன் வாக்குத்தத்தத்தில் உண்மையுள்ளவர், வாக்கு மாறாதவர், கடந்த வருடம் நமக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தின்படி எனக்கு செய்து நிறைவேற்றி இருக்கிறார் என்பதில் சிறிதேனும் எனக்கு சந்தேகம் இல்லை. நம் அனைவருக்கும் அப்படியே! என்று கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன்.

நம் ஆண்டவர் நம்முடைய வாழ்க்கையில் ஏற்ற வேளையில் ஏற்ற காரியங்களை நிறைவேற்றுகிறவர். ஆமென்!

அவர் சொல்லியும் செய்யாதிருக்கிற தேவன் அல்ல. அவர் பொய்யுரையாத தேவன் என்று வேதத்தில் வாசிக்கிறோம், அவர் வாக்கு மாறாத தேவன் நமக்கு அவர் சொல்லியதை செய்யுமளவும் நம்மோடு கூட இருந்து வழி நடத்துகிறவர் அதை போல இந்த ஆண்டு புதிய காரியங்களை நமக்கு செய்வேன் செய்கிறேன் என்று எனக்கும் உங்களுக்கும் வாக்கு கொடுக்கிறார்.

எந்தெந்த பகுதியிலே புதிய காரியத்தை தேவன் செய்ய போகிறார் என்று நாம் வேதத்தின் படி ஆராய போகிறோம்

## தனி மனித வாழ்க்கையில்

யாருடைய வாழ்க்கையில் அவர் புதிய காரியத்தை செய்தார் என்று பார்ப்போம் பார்த்தியுமேயு அவன் பிறவி குருடன் ஆண்டவர் அந்த ஊருக்கு வரும் வரை ( ஒரு கற்பனைக்கு)எத்தனையோ தேவ மனிதர்கள் வந்து சென்று இருக்கலாம் (இதை வேதத்தில் குறிப்பிடபடவில்லை) அவன் அவர்களிடமும் அவனுடைய சுகத்திற்காக மன்றாடி இருக்கலாம் ,ஆனால் அவர்களால் அவனுக்கு சுகம் கொடுக்க முடியவில்லை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எரிகோவிற்கு அந்த வழியாக வருகிறார் என்று அறிந்தவுடன் அவன் கூக்குரலிடுகிறான் "தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும்" என்று. உடன் உள்ளவர்கள் அவனை மட்டு படுத்துகிறார் இறையாதே, என்று ஆனால் அவன் முன்னிலும் அதிகமாக கூக்குரலிடுகிறான். "தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும்" என்று ஆண்டவர் அவன் கூக்குரலை கேட்டு அவனை அருகில் அழைத்து வர கட்டளையிடுகிறார்.

அவர் உடன் இருந்தவர்கள் அவனிடம் சென்று "திடன் கொள் எழுந்திரு ஆண்டவர் உன்னை அழைக்கிறார்" என்றவுடன் அவன் எழுந்து அவன் வஸ்திரத்தை தூக்கி எரிந்துவிட்டு இயேசுவினிடத்தில் ஓடி வருகிறான். வந்தவுடன் ஆண்டவர் கேட்கிறார் நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்றிருக்கிறாய் என்று, அவன் அவனுடைய தேவையான "நான்" பார்வையடைய வேண்டும் என்று கேட்கிறான்.

ஆண்டவர் அவனை தொடவில்லை, அவனுக்காக ஒன்றும் செய்யவில்லை, ஒரே ஒரு வார்த்தையில் சுகம் "நீ போகலாம் உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது: என்றார். அவன் பார்வையடைந்து இயேசுவை அவன் பின்தொடர்ந்தான். (மாற்கு 10:47-52) என்று வாசிக்கிறோம்

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே இந்த வேத பகுதியில் நான்கு காரியங்களை பார்க்கலாம் ஒன்று இயேசுவினிடத்தில் சுகத்தை விரும்பினான், இரண்டு மற்றவர்களுடைய வற்புறுத்தலுக்கு அவன் தன்னை கட்டுபடுத்தி கொள்ளவில்லை, மூன்று அவர் அழைத்தவுடன் தன்னுடைய பழைய வஸ்திரத்தை தூக்கியெரிந்து விட்டு இயேசுவினிடத்தில் வந்தான், நான்கு சுகம் பெற்றவுடன் இயேசுவோட நடந்தான், எல்லாவற்றிற்கும் மேலாக ஐந்தாவதாக அவன் இயேசுவை விசுவாசித்தான், ஆண்டவர் சுகம் கொடுக்கும் முன் அவனிடம் சொன்ன வார்த்தை "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்றார் அவரால் சுகம் கொடுக்க முடியும் என்ற அசைக்க முடியாத விசுவாசம் அவனிடத்தில் காணப்பட்டது.

அன்பான தேவ ஜனமே நாம் பர்த்தியுமேயை போல தேவனிடத்தில் சுகத்தை அல்லது நமது தேவைகளை விரும்புகிறோமா? அல்லது உலகப்பிரகாரமான நம்முடைய தேவைகளுக்காக மனிதர்களை நம்பி போகிறோமா? மற்றவர்களுடைய வற்புறுத்துதலுக்கு ஆண்டவருடைய காரியத்தை தள்ளி போடுகிறோமா? இயேசுவை அறிந்தும் இன்னும் நம்முடைய பழைய வாழ்க்கையைவிட்டு மீள முடியாமல் இருக்கிறோமா? அல்லது சுகம் பெற்று கொண்டபின் நன்கொடையின் பிள்ளைகளாக சுகத்திற்காக இயேசுவிடம் வந்து சென்றவர்களாக நாம் இருக்கிறோமா? அல்லது விசுவாசமே இல்லாமல் இருக்கிறோமா? வேதம் சொல்லுகிறது " விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்;."எபி-11:6 அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்.யாக்-2:17என்று வாசிக்கிறோம்.

ஆண்டவர் வாக்குத்தத்தம் கொடுக்கிறார், அது நிறைவேற வேண்டுமானால் பர்திமேயுவின் குணங்கள் நமக்குள் இருக்கின்றனவா என்று பார்ப்போம், அப்படி நம் வாழ்க்கயை நாம் மாற்றி கொள்ளும் பட்சத்தில் தேவன் பர்த்திமேயு என்ற தனிமனிதனின் வாழ்வில் செய்த புதிய காரியத்தை நம்முடைய வாழ்க்கையிலும் செய்வார் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

## பிள்ளைகளுடைய வாழ்க்கையில்

விசுவாசத்தின் தகப்பன் ஆபிரகாமை எடுத்து கொண்டோம் என்றால் தேவனுக்கு மிகவும் பிரியமான முற்பிதாக்களில் இவரும் ஒருவர். ஆண்டவர் இவரது விசுவாசத்திற்கு ஒரு சத்திய சோதனையை வைக்கிறார். நாம் எல்லோரும் அறிந்த வேத விளக்கம் மகன் ஈசாக்கை பலியிட கேட்கிறார் ஆண்டவர். வயது முதிர்ந்த காலத்தில் தேவன் அவருக்கு கொடுத்த ஒரு வாக்குத்தத்தின் மகன், அவனை ஆண்டவர் பலியாக கேட்கிறாரே என்று கொஞ்சம் கூட யோசிக்கவில்லை. மகனை அழைத்து கொண்டு பலியிட செல்கிறார். மகனும் தந்தையுமாக ஆண்டவர் சொன்ன மோரிய மலையை நோக்கி கழுதையின் மேல் செல்கிறார்கள், அந்த இடத்தை அடைந்தவுடன், ஈசாக்கு தந்தையிடம் கேட்கிறார் அப்பா பலிக்கு தேவையான எல்லா பொருட்களும் உள்ளதே பலியிட தேவையான ஆட்டுகடா எங்கே என்று கேட்கிறார். தந்தை சொல்கிறார் எல்லாம் கர்த்தர் பார்த்து கொள்வார் என்று, அதன் பின் இருவரும் ஆண்டவர் சொன்ன அந்த இடத்தை அடைந்தவுடன் பலிபீடம் உண்டாக்கபட்டு அதிலே ஈசாக்கை கிடத்துகிறார்.

ஆபிரகாம் தன் கையை நீட்டி கத்தியை ஓங்கி ஈசாக்கின் மேல் நெருங்கி வரும் வேளையில் வானத்தில் ஓர் அசரீரி ஒலிக்கிறது.

அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் வானத்திலிருந்து, ஆபிரகாமே, ஆபிரகாமே என்று கூப்பிட்டார்; அவன்: இதோ, அடியேன் என்றான்.

அப்பொழுது அவர்: பிள்ளையாண்டான்மேல் உன் கையைப் போடாதே, ......அவனுக்கு குமாரனுக்குப் பதிலாகத் தகனபலியிட்டான். ( ஆதியாகமம் 22:1 முதல் 13)

பிள்ளைகளுடைய வாழ்க்கையில் புதிய காரியத்தை தேவன் செய்ய வேண்டுமென்றால் பெற்றோரிடத்தில் தேவன் விசுவாசத்தையும், கீழ்படிதலையும் எதிர்பார்க்கிறார். அதே போல பிள்ளைகளிடத்தில் பெற்றோருக்கும் ஆண்டவருக்கும் கீழ்படிதலை எதிர்பார்க்கிறார்.

ஆபிரகாம் ஆண்டவரிடம் அவர் கொண்டிருந்த விசுவாசத்தினால் அவர் கேள்வி கேட்கவில்லை ,ஆண்டவரே இவ்வளவு நாளுக்குபின் நீர் கொடுத்த பிள்ளையல்லவா அவளை பலியாக கேட்கிறீரே " என்று ஒரு வார்த்தை பேசவில்லை ஆண்டவர் கேட்ட அடுத்த நொடி தன்னுடைய மகனை அழைத்துக்கொண்டு சென்றார். இந்த ஆண்டவருக்கு கீழ்படிதல் நமக்குள் உள்ளதா அல்லது நமது பொறுப்பை தட்டி கழிக்கிறோமா? பிள்ளைகளுக்கு ஆண்டவருடைய மகத்துவத்தை சொல்லி விசுவாசத்தில் நடத்துகிறோமா? அல்லது பிள்ளைகளுடைய அன்பிற்கு இணங்கி அவர்கள் வழியிலே அவர்களை நடக்க அனுமதிக்கிறோமா?

ஈசாக்கு தந்தையிடம் கேட்கிறார் தந்தையே பலியிட ஆட்டுகடா எங்கே என்று, ஆனாலும் தந்தை ஆண்டவர் பார்த்து கொள்வார், என்றவுடன் அதை பெரிது படுத்தவில்லை உடனே அப்படியே கீழ்படிகிறார். அவர் ஆண்டவருடைய வார்தைக்கும் கீழ்படிந்தார், அதே சமயத்தில் தகப்பனுக்கும் கீழ்படிந்தார். இருவருடைய கீழ்படிதலும் பரலோகத்தில் இருக்கும் ஆண்டவருடைய இதயத்தில் ஓர் இரக்கத்தை உண்டாக்கியிருக்க கூடும், ஏனெனில் நமது ஆண்டவர் மனதுருக்கம் உடையவர், நம்முடைய பிள்ளைகளுக்கு ஆண்டவரின் கட்டளைகளுக்கும் கர்ப்பனைகளுக்கும் கீழ்படிய பழக்கபடுத்துகிறோமா? கீழ்படிதலால் மாத்திரம் ஆசீர்வாதம் என்பதை நம்முடைய பிள்ளைகளுக்கு உணர்த்துகிறோமா?. இன்றைய நாட்களில் தேவனுடைய பிள்ளைகள் பெற்றோருக்கு கீழ்படியாமலும் உலக காரியங்களிலும், போதைக்கும், அடிமையாகி ஆண்டவருக்கு பிரியமில்லாத காரியங்களில் தங்களை ஈடுபடுத்தி கொண்டும் தங்களுடைய வாழ்க்கையை கெடுத்து கொண்டு இருக்கிறார்கள்.

பிள்ளையாண்டனுக்கு பெரிய ஆசீர்வாதத்தை கொடுத்தார், ஈசாக்கின் மகன் யாக்கோபின் வழியில் ஒரு பெரிய சரித்தரமே உருவானது.இப்படியாக ஈசாக்குடைய வாழ்க்கையில் புதிய காரியத்தை ஆண்டவர் செய்தார்.

கிறிஸ்துவக்குள் பிரியமான சகோதரனே சகோதரியே!. பர்திமேயுவின் வாழ்வில் விசுவாசம் காணப்பட்டது. ஆண்டவரை தன் வாயால் அறிக்கையிட்டான், அழைத்தவுடன் தன்னுடைய பழைய வாழ்க்கையை விட்டு ஆண்டவரிடம் வந்தான், மனிதர்களுக்காக ஆண்டவருடைய காரியத்தில் தன்னை சமாதான படுத்தி கொள்ளவில்லை, அவருக்காக ஓடினான்,அவருடன் ஓடினான்

ஆண்டவருடைய வாக்குத்தத்தம் நம் வாழ்விலும் நம்பிள்ளைகளுடைய வாழ்விலும் நிறைவேற முக்கிய இரண்டு காரியங்களை பற்றி தியானித்தோம் ஒன்று விசுவாசம், இரண்டாவது கீழ்படிதல் இவை இரண்டையும் நாம் நம்முடைய வாழ்வில் கொண்டால் அவரது வாக்குதத்தம் நம் வாழ்விலும் நம்முடைய பிள்ளைகளுடைய வாழ்விலும் நிறைவேறும் "கர்த்தர் புதிய காரியம் செய்வார்" என்பதில் கொஞ்சமும் சந்தேகம் இல்லை. ஆமென்!

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரன்

Isaacdurai

# 2019 டிசம்பர் மாத வேத வினாவுக்கு பதில்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| து | ன் | மா | ர் | க் | க | ர் | | | |
| தி | | வி | செ | | ட் | | | ம் | பா |
| யு | த் | த | ம் | ம் | ட | | | க | க் |
| ட | | வை | மை | க | ளை | | பை | ரு | கி |
| ன் | | க | யா | ட் | க | எ | ப் | மி | ய |
| | | ளு | ண | வெ | ள் | ளி | சி | டா | வா |
| | | க் | வ | | | ய | ட் | ண் | ன் |
| வி | ரு | கு | னை | | | வ | ர | கா | |
| | | | | | மா | ன் | இ | | |

## மேலிருந்து கீழ்

1. சங்கீதம் 147:7
2. சங்கீதம் 119:40
3. சங்கீதம் 68:5
4. சங்கீதம் 11:7
6. சங்கீதம் 1:2

## வலமிருந்து இடம்

7. சங்கீதம் 107:43
10. சங்கீதம் 102:7

## கீழிருந்து மேல்

9. சங்கீதம் 71:1
11. சங்கீதம் 92:10

## இடமிருந்து வலம்

1. சங்கீதம் 141:10
5. சங்கீதம் 144:1
9. சங்கீதம் 66:10
12. சங்கீதம் 18:33

## 2019 டிசம்பர் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்
Sis. நகோமி ஜான்சன்
Sis. செலின் டேவிட்
Sis. சாந்தி
Sis. பத்மினி வர்கீஸ்

கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபை குடும்பத்தார் மற்றும் கேம்ப் சகோதரர்கள் அனைவருக்கும் அஹமதி தமிழ் திருச்சபை செய்றகுழு மற்றும் ஊழிய பொறுப்பாளர்கள் சார்பாக 2020 புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறோம்

Wish you a Happy new year (2020)

"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; . . . " (ஆதி – 12:2)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

சகோ. ஜெகன்
செல்வன். ஆல்வின் டேவிட் மணிராஜ்
செல்வன். ஜீவி பாக்கியவதி வேதானந்தம்
செல்வி. ஷாரோன் ஜெனீஃபர் வின்ஸனட்
சகோ. இயேசுதாஸ் ஆரோக்கியதாஸ்
சகோதரி. சுசீலா லாசர்
சகோ. ஐசக்துரை
சகோதரி. நவீதா பால் ராஜேஷ்
செல்வன். ஜோஷன் ஜீவா ஜீவல் சிங்
செல்வி. ஜெனட் ஆரோக்கியதாஸ்
சகோ. சுதாகர்
சகோ. சுபின் சிங்
செல்வி . பிரின்சி கமலநாதன்
செல்வி. சுனிதா சுந்தர்ராஜ்
சகோ. ஆரோக்கியராஜ்
சகோ. செங்குட்டுவன்
சகோ. ராஜ்
சகோதரி. ஜோன் ஆஃப் ஆர்க்
சகோதரி. சுமதி ஐசக் துரை
செல்வி. ஷெரின் பெனிற்றா ஸ்டாலின்
சகோதரி. விக்டோரியா ராஜன்
செல்வி. சாரா ஆல்வின்
செல்வன். சாமுவேல் ஆல்வின்
செல்வி. அக்சாள் நிசி எபிநேசர்
சகோதரி. பிரிஸ்சில்லா அந்தோனிசாமி
சகோதரி. ஹெப்சிபா ஸ்டீபன்
சகோதரி. அபிகால் கிரேஸ் ஜஸ்டின்
செல்வி.காருண்யாரவிச்சந்திரன்
சகோதரி. பிரிஸ்சில்லா செங்குட்டுவன்
சகோதரி. அபியா சுனில் சுந்தராஜ்

உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குவேன்; (எரே.15:20)

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி – திரு. தம்புகுமார் டென்னிஸ்
திருமதி – திரு. சாம் ஆனந்த்
திருமதி – திரு. வில்கின்ஸ் தினகரன்
திருமதி – திரு. பாபு
திருமதி – திரு. மணிராஜ்
திருமதி – திரு. சாமுவேல் E
திருமதி – திரு. வின்சன்ட் சுவீட்
திருமதி – திரு. ஷர்மன்ராஜ்
திருமதி –திரு. இயேசு ரெத்தினம்
திருமதி –திரு. தினேஷ் குமார்
திருமதி – திரு. கனீஷ் ஜோஷ்வா அமலன்
திருமதி –திரு. பவுல் ராஜேஷ்
திருமதி –திரு. வேளாங்கன்னி

# 2020 ஜனவரி மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 05/01/2020 | சகோ. ஆரோக்கியராஜ் | சகோ. தாமஸ் |
| 12/01/2020 | சகோ. ஜினோ | சகோ. அசோக்குமார் |
| 19/01/2020 | சகோ. கிருஸ்டோபர் | சகோ. ஜெகநாதன் |
| 26/01/2020 | சகோ. பிரசாத் சுந்தரம் | சகோ. சுகுமார் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 5:45 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 03/01/2020 | சகோ. வேலு ராமர் | சகோ. ஸ்டீஃபன் |
| 10/01/2020 | சகோ. ஜெயசேகர் | சகோ.கிறிஸ்டோபர் |
| 17/01/2020 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 24/01/2020 | சகோ. ஆரோக்கியதாஸ் | சகோ. ஜசக்துரை |
| 31/01/2020 | சகோ. எபினேசர் | சகோ. சாமுவேல் தாசையா |

**9/01 /2020** அன்று முழு இரவு ஜெபம் (இடம் பரிசுத்த பவுல் ஆலயம் )–
நேரம் இரவு 10 மணி முதல் அதிகாலை 2:00 மணிவரை

**25/01/2020** அன்று மாதாந்திர பெண்கள் ஐக்கிய கூடுகை
இடம் : பாஹீலில் உள்ள ஜெபவீடு – நேரம் மாலை 6:30 முதல் இரவு 8:30
(வேத வினா பகுதி தானியேல் புத்தகத்தில் இருந்து)

**31/01/2020** அன்று மாதாந்திர வாலிபர் ஐக்கிய கூடுகை
இடம் : பாஹீலில் உள்ள ஜெபவீடு – நேரம் மாலை 6:30 முதல் இரவு 8:30
(சகோ. சாம் ஆனந்த் அவர்கள் குடும்பத்தின் சார்பில்)
(வேத வினா பகுதி நீதிமொழிகள் புத்தகத்தில் இருந்து)

# 2020 ஜனவரி மாதத்திற்கான வேத வினா!

## கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | 2 | | | | | | | | 3 | | 4 |
| | | | | | | | 5 | | | | | | | | |
| | | | 6 | | | | | | | | | | | 7 | |
| 8 | | | | | 9 | | | | | | | | | | 10 |
| | | | | | | | | | | | 11 | | | | |
| | 12 | | | | | | | | | | | | | | |
| | | | | | | 13 | | | 14 | 15 | | 16 | | 17 | |

விடைகளை வருகின்ற 18-01-2020க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொருப்பாளரிடமோ நேரிலோ அல்லது வாட்ஸ்ஆப்ஸிலோ (whatsApps # 66015503 - with Name ) அனுப்பும்படி (கொடுக்கும்படி) கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை "ஆதியாகமம்" 1,2,3,புத்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும்

### மேலிருந்து கீழ்

1 இரவை ஆள தேவன் ———– உண்டாக்கினார்?(6)

2. ஏவாள் என்றால் ? (5)

4.அவர் ———– தலையை நசுக்குவார்(2)

6. முதல் நாள் உண்டானது ?(5)

7. ஏதோனிலிருந்து ஓடியது ? (2)

10.தேவன் 6ஆம் நாள் உண்டாக்கின பிராணி?(3)

11. ஸ்திரியின் ———– புருஷனை பற்றியிருக்கும் ?(2)

### கீழியருந்து மேல்.

12. ஏதேன் ஒரு ? (4)

13. பூமியின் மேல் எங்கும் ——— சகலவித பூண்டுகளும் ஆகாரமாயின ?(5)

14. ஒரு கல் (7)

16. தோட்டத்தை உண்டாக்க மனுஷன் அதிலே ———–(4)

### வலம் இருந்து இடம்.

1. ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும்———–(7)

5. தோலினால் செய்யப்பட்டது (4)

8. காவல் செய்ய வைத்த பட்டயம் (4)

9. சுடர்கள். அயைாளங்களுக்காகவும் இதை குறிக்கிறதற்காகவும் இருக்ககடவது(5)

11. விருட்ச்சங்களுக்குள்ளே ஒளிந்து கொண்டவர் (3)

### இடமிருந்து வலம்.

3. ஆசியாவுக்கு கிழக்கே ஓடும் ஆறு? (5)

10. கர்த்தர் ஜீவ சுவாசத்தை மனுஷனிலே (4)

13. ஆவிலா தேசத்திலே பொன் ———–(4)

15. இரண்டாம் ஆறு (3)

17. பூமிக்கு திரும்பும் மட்டும் இதினால் ஆகாரம் புசிப்பாய். (3)

## – – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – –

மத்தேயு 7:7

# மிஷனரி செய்திகள்

## ஜேக்கி புல்லிங்கர் (1944)

நான்கு பெண் குழந்தைகளைக் கொண்ட ஒரு ஆங்கிலேயக் குடும்பத்தில் இரட்டையர்களில் ஒருவராகப் பிறந்த ஜேக்கி புல்லிங்கர் தன் இளம் வயதிலேயே மிஷனெரி அழைப்பை உணர்ந்தார். ராயல் இசைக்கல்லூரியில் பட்டம் பெற்று ஆப்பிரிக்காவில் உள்ள பள்ளிகள், பொதுநல ஸ்தாபனங்கள் மற்றும் தொலைத் தொடர்பு நிறுவனங்களுக்கு தேவப்பணி செய்யும்படியான தனது விருப்பத்தைக் கடிதத்தின் மூலம் தெரிவித்தபோது அவருடைய உதவி அங்கு தேவையில்லை என்று மறுப்புத் தெரிவித்தார்கள். பின்னர் தன்னுடைய சொப்பனத்தில் ஆப்பிரிக்க வரைபடத்தின் மத்தியில் ஹாங்காங் தேசத்தை அவர் கண்டார். நெடுந்தூர ஊழியப்பாதையில் தனி நபராகவே செயலாற்றினார் என்பதற்கு ஜேக்கி ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

அவரது ஊழியம் போதை பொருட்களாலும் தொற்று நோயினாலும் நிறைந்து காணப்பட்ட அடைக்கப்பட்ட நகரமான ஹக்நம்மில் வாழும் ஏழ்மையிலும், ஏழ்மையானவர்களுக்கு மட்டுமே. அந்நகரத்து சந்துக்கள் மிகவும் குறுகினதாகவும், சூதாட்டம் நிறைந்ததாகவும், போதைப் பொருட்களுக்கு பெயர்போன இடமாகவும், மயக்கமூட்டிக் கொள்ளையடிக்கும் மாதுக்களால் நிறைந்ததும், மதிய வேளையில்கூட இருள் சூழ்ந்து எப்பொழுதாவது மட்டுமே சூரியன் தலைகாட்டும் இடமாகவும் காணப்பட்டது.

புல்லிங்கர் அந்த இடை மறைக்கப்பட்ட பட்டணத்தில் திருப்பணி செய்யும் மற்றவர்களோடு நல்ல ஐக்கியத்தினை ஏற்படுத்தி பொதுச்சேவை நிறுவனம் ஒன்றின் பள்ளியில் ஆங்கிலம், சங்கீதம் மற்றும் இசைக்கருவி வாசிக்கக் கற்றுக்கொடுத்தல் போன்ற வேலைகளைப் பகுதி நேரமாகச் செய்தார். அவ்வப்பொழுது கிடைக்கும் தன்னார்வப் பணியாளர்களைக் கொண்டு அமைத்த இளைஞர் சங்கத்தை நடத்திச் செல்வதே அவருடைய முக்கியக் குறிக்கோளாகக் காணப்பட்டது.

ஆரம்பத்தில் அவருடைய ஊழியத்தில் அவருக்குக் குறைந்த வெற்றியே கிடைத்தது. உயர்தர வர்க்கத்தின் ஆங்கிலேயப் பெண் போன்று தோற்றமளித்த புல்லங்காரிடம், பணத்தையும் மற்ற சலுகைகளையும் எதிர்பார்த்து வெறும் வயிற்றுக்காக சாப்பாட்டு கிறிஸ்தவர்களாக மட்டுமே

அவரிடம் வர ஆர்வம் காட்டினார்கள். ஆனால் வெகுவிரைவில் சம்பவங்கள் மாறத்தொடங்கின.

வாலிபர்கள் தங்களை ஒப்புக் கொடுத்து தீர்மானங்களை எடுத்தார்கள். பரிசுத்த ஆவியின் வல்லமையால் ஜெபித்தால் மட்டுமே இவ்விதமான மாறுதல்கள் சாத்தியம் என்பதை உணர்ந்தார். புல்லிங்கர் தனது ஊழியத்தில் அடிப்படை சுவிசேஷ வழிமுறைகள் மூலம் எதையும் சாதிக்க இயலாதவராய் இருந்தார். கிறிஸ்தவ இலக்கியங்களுக்கு மட்டுமே அவர் முக்கியத்துவம் கொடுத்தார். அதிகமதிகமாய் பிரயாசங்கள் பட்ட போதிலும் தன்னுடைய பணியில் கேடுகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. அவருடைய செல்வாக்கு பெருகினபடியால் அவருடைய திருப்பணிக்கு அதிகமான அச்சுறுத்தல்கள் காணப்பட்டன. இன்னும் சிலர் அந்த பட்டணத்தைவிட்டு அவரை அகற்ற எண்ணினர்.

ஒரு இரவு வேளையில் அவருடைய வாலிபர் சங்கம் முற்றலுமாக இடித்துத் தள்ளி நாசமாக்கப்பட்டது. பழுதுபார்த்து சீர் செய்யத் தீர்மானம் எடுத்தார். இடைமறைக்கப்பட்ட அந்த நகரத்தில் புல்லிங்கரின் உடன் வேலையாட்கள் அவருடைய ஊழியத்தின் மூலம் கிறிஸ்தவர்களாக மாறினவர்களே. இவர்களுடைய சுவிசேஷப் பணியின் மூலம் ஊழியம் தொடர்ந்து விரிவடைந்தது மட்டுமல்லாமல் அவருடைய பணித்தளமாகிய வாலிபர் சங்கமும் ஒழுங்கு படுத்தப்பட்டது.

1993-ல் திரைமறைக்கப்பட்ட அந்த நகரம் முற்றிலுமாக அழிக்கப்பட்டு ஒரு பூங்கா நிறுவப்பட்டது. அநேக ஜனங்களால் இந்த மாற்றத்தை ஏற்றக்கொள்ள இயலவில்லை, ஆனால் புல்லிங்கரோ அதை ஏற்றுக்கொண்டார். போதை மருந்து ஒழிப்பு மற்றும் சுவிசேஷ மயமாக்குதல் ஹாங்காங்க்கில் மட்டுமல்ல உலகத்தின் பல்வேறு பகுதிகளில் இந்தியா, இலங்கை, பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, மலேஷியா மற்றும் ஐரோப்பாவிலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இடைமறைக்கப்பட்ட இந்த நகரம் அழிக்கப்பட்ட பின்னும், தன்னுடைய சுற்றத்தாருக்குக் காண்பித்த மாறாத அந்தத் தோற்றமும், மனோநிலையும் அவருடைய கனி நிறைந்த ஊழியத்திற்கு முக்கியக் காரணம்.

அன்பு சகோதரன்

சுகுமார். S

எனதருமையான கிறிஸ்துவிற்குள் அன்பான சகோதர சகோதரிகளே, புதிய வருடத்தில் உங்கள் யாவருக்கும் ஆண்டவர் கொடுக்கும் வாக்குத் தத்தம் "பயப்படாதிருங்கள்"

அருமையான கிறிஸ்து பிறப்பின் மாதத்திலே உங்கள் யாவருக்கும் ஆண்டவர் கொடுக்கும் வாக்குத் தத்தம் "பயப்படாதிருங்கள்"

அன்பான வாலிபனே வாலிப சகோதரியே பயப்படாதே உன்னையும் என்னையும் மீட்கும்படியாக பாவத்திலிருந்து நம்மை பறைபடாதவாறு நம்மை மீட்டு எடுக்க இரட்சகர் பிறந்திருக்கிறார். அவர் அதிசயமானவர் ஆலோசனைக் கர்த்தா வல்லமையுள்ள தேவன் நித்திய பிதா சமாதனப்பிரபு ஏசாயா-9:6 எனவே நீயும் நானும் கலங்கத் தேவையில்லை.

நீ எதிர்பார்த்திருக்கும் முடிவை நிச்சயம் உனக்கு தந்தருளுவார். ஏனென்றால் அவர் அதிசயமானவர் உன்னை சுற்றி இருப்பவர்கள் ஒரு வேளை அவிசுவாசமாய் பேசலாம். எப்படி இந்த காரியம் நடக்கும் என்று நீ விசுவாசமுள்ளவனாய் இரு. நமக்கு அதிசயமானவர் கொடுக்கப்பட்டிருக்கிறார்.

## <u>ஆலோசனைக் கர்த்தா</u>

ஒரு வேளை நான் போகும் பாதை எப்படிப்பட்டதாக இருக்கும் என்று கலங்கி கொண்டிருக்கும் அன்பான வாலிபனே சகோதர சகோதரியே நமக்கு ஆலோசனைக் கர்த்தா கொடுக்கப்பட்டிருக்கிறார். அவர் உனக்கு போதித்து நடக்க வேண்டிய வழியை உனக்கு காட்டுவார். உன்மேல் அவர் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவார் ஏனென்றால் அவர் ஒரு ஆலோசனைக் கர்த்தா.

அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களை நடத்த ஆலோசனைக் கர்த்தராயிருந்தவர் நம் தேவன் என்பதை மறந்து விட வேண்டாம்.

குடும்பத்தில் எந்த முடிவை எடுப்பது என்பது பற்றிய சிந்தையோடு இருக்கும் அன்பான பிள்ளைகளே கர்த்தருடைய பாதத்தில் கண்ணீரோடு அமர்ந்திருக்கிற உங்களுக்
கு தேவன் நல்ல ஆலோசனைக் கர்த்தராக இருந்து நிச்சயம் நடத்துவாராக.

1 - இராஜா-3-ஆம் அதிகாரத்தில் சாலமோன் ராஜாவினிடத்தில் ஒரு பிள்ளைக்கு சொந்தம் கொண்டாட வந்த இரு ஸ்தீரிகளுக்கு சாலமோனுக்கு தேவன் கொடுத்த ஞானத்தின் பிரகாரம் நல்ல ஆலோசனையினால் நியாயத்தை நிலைநிறுத்தினார். அப்படிப்பட்ட ஞானத்தை இந்த டிசம்பர் மாதம் தேவன் உங்களுக்கு தருவாராக. பயப்படாதிருங்கள்.

## <u>வல்லமையுள்ள தேவன்</u>

அன்பான தேவனுடைய பிள்ளைகளே ஆதியாகமம் புஸ்தகத்தில் ஆபிரகாமை குறித்து பார்க்கும் பொழுது ஆபிரகாம் ஒரு குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கிறவராக பார்க்கிறோம்.

ஆபிரகாம் கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தத்தை பின்பற்றாமல் தவறான பாதைகளில் சென்றதால் கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தம் சற்று தாமதமாகி சென்றதை நாம் பார்க்கமுடிகிறது. ஆதி-17:1

"கர்த்தர் ஆபிரகாமுக்கு தரிசனமாகி நான் சர்வ வல்லமையுள்ள தேவன் நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு என்று அவனை எச்சரிக்கிறார்.

ஏனென்றால் ஒரு சில ஆசீர்வாதங்களுக்கு காத்திருக்கும் போது ஆண்டவர் நம்மை ஆசீர்வதிக்க நாம் நம்மை தகுதியாக வைத்திருக்க வேண்டும். ஆண்டவருக்கு நெருங்கிய உறவு வைத்து கொள்வதை அவர் அதிகம் விரும்புகிறார்.

வேதம் சொல்கிறது,

நீதி-28:9 "வேதத்தை கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது" எனவே வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள் எனவும் வேதம் கூறுகிறது. கர்த்தருக்கு பிரியமாய் உங்கள் வாழ்க்கையை ஒப்புக்கொடுக்கும்போது அநேக ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

## நித்திய பிதா

பிரியமான தேவனுடைய பிள்ளைகளே நமக்கு நித்திய ஜீவனை கொடுக்கும்படியாக இயேசு கிறிஸ்து நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறார்.

சோர்ந்து போகாமல் நற்கிரியைகளை செய்பவர்களுக்கு நித்திய ஜீவனை கொடுப்பாராம். முக்கியமாக கிறிஸ்மஸ் நேரங்களில் நற்கிரியைகள் செய்ய அதிகமாக பிரயாசபட வேண்டும். வீணான செலவுகள் ஆடம்பர நிகழ்ச்சிகள் போன்றவற்றை சற்று தவிர்த்து ஒரு வேளை உணவு கூட இல்லாமல் இருக்கும் அநேக ஏழை குழந்தைகள் ஆதரவற்ற பிள்ளைகள் ஆகியோருக்கு நற்கிரியைகள் செய்யும் வண்ணமாக ஏதேனும் நல்ல செயல்களை செய்வதன் மூலம் பிதாவானவரின் பிறப்பின் நோக்கத்தை அறிய செய்யலாம்.

ஏழைகளுக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான். அவன் கொடுத்ததை அவர் திரும்பக்கொடுப்பார். நீதி-19:17

எனவே கிறிஸ்துபிறப்பின் நோக்கத்தை முழுமையாக அறிந்துகொண்டு நற்கிரியைகளை செய்ய பழகி கொண்டு அழியாத நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ளுங்கள்.

## சமாதான பிரபு

முன்பு காலங்களில் சமுதாயத்தில் ஏதேனும் சண்டை சச்சரவுகள் ஏற்பட்டாலும் ஏதேனும் தகராறு வந்தாலே அநேகர் தேடுவது வேதகாரர்கள் என்று அழைக்கப்படும் கிறிஸ்தவனையே ஏனென்றால் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறார் சமாதான பிரபு அவருடைய நாமத்தையே நாம் தரித்திருக்கிறோம்.

ஒரு வேளை கிறஸ்தவனுக்கு சமாதானக் குறைவு ஏற்படாமல் அவன் இடறலடையாதபடிக்கு அவர்களுக்கு பரிசு வேதாகமம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சங்கீதக்காரன் சொல்கிறான் "நம்முடைய வேதத்தை நேசிக்கிறவனுக்கு மிகுந்த சமாதனமுண்டு அவர்களுக்கு இடறலில்லை"
(சங்கீ-119:165)

வேதத்தை அனுதினமும் தியானித்து ஜெபிக்கும்போது நமக்கு ஒரு போதும் இடறலில்லை என பார்க்கிறோம்.

ஒரு வேளை சத்துரு நமக்கு விரோதமாக பாளயமிறங்கினாலும் பல வேதனைகளை உண்டாக்கும் விதமாக செயல்படாமலும் சத்துருகளுக்கு முன்பாக பந்தியை ஆயத்தப்படுத்துகிற தேவன் நம்முடைய தேவன் எல்லாவற்றிலும் நம்முடைய வழியை பரிசுத்தமாய் காத்துக்கொள்ளும் போது நம்முடைய சத்துக்களும் நம்மோடு கூட சமாதானமாகும்படி செய்வார்.

ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால் அவனுடைய சத்துக்களும் அவனோடே சமாதானமாகும்படி செய்வார் (நீதி-16:17)

தேவன் தாமே நம் அனைவரோடுங்கூட இருந்து 2020-ல் ஒரு ஆசீர்வாதமான ஆண்டாக மாற்றுவாராக. ஆமென்.

வாலிபம் இயேசுவுக்கே.

# PRAISE THE LORD

Greetings to you all in the matchless name of our Lord and Savior Jesus Christ . Our God graciously has enabled us to enter into a New year. He has given another year as a treasure in our lives to praise Him and glorify Him. For all the goodness which God has done in our lives even if we have 1000 tongues it is not enough to praise Him and thank Him. We as women of the church are the backbone of the church whose knees when we bend in prayer in the presence of the Lord will create a great revival in the church.

We would have made a lot of new year resolutions to lead a life pleasing to God in this year. Let us ask the Lord's grace and guidance to abide with it. Let us spend more time in the presence of the Lord meditating His word and talking to Him in the prayer.

Psalms 1:12 says "Blessed is the man that walketh not in the counsel of the ungodly, nor standeth in the way of sinners, nor sitteth in the seat of the scornful .

But his delight is in the law of the Lord, and in His law doth he meditate day and night.

We read about so many women in the bible, when they sought the Lord in times of troubles and needs God worked miracles in their lives.

1) In 1 Samuel 1:10 we read about the prayer of Hannah who prayed with bitterness of soul and wept sore in the temple of God. Due to this God gave her the desire of her heart, a son Samuel who lived according to the will of god and became a great prophet in Israel. So also when we pray for our wants and needs. God will grant to us according to His will.

2) Prayer of Queen Esther in Esther 4:16 with fasting. This brought salvation to the Jews from the death sentence written against them due to plot of Haman so also when we fast and pray God will remove all the bondage's in our lives whether it is sickness, debts, peace less ness, satanic attack, financial crisis or any other bondage's.

3) Prayer of Hagar in Genesis 21:15-19 was seen by God and given water when she and her son were thirsty. So also God will remove

all our physical or spiritual thirst we have when we sit in the presence of God.

4) Mary's prayer of blessing shows how focusing on God's character offers our heart's joy (Luke 1:46-56) she describes God as savior, mighty, holy, merciful and strong. Comparison, discontentment and anxiety will steal our joy but when we look into the Lord and see all He is, then we can rejoice. All our sorrows will turn to joy.

Let us not only pray for ourselves but pray for others too. Let us use the 5 finger to guide when praying for others.

- When you fold your hands, the thumb is nearest to you. So begin by praying for those closest to you – your loved ones. (Philippians 1:3-5)
- The index finger is the pointer. Pray for those who teach – Bible teachers, preachers and those who teach children (1 Thes 5:25)
- The next finger is the tallest. It reminds you to pray for those in authority are you – national and local leaders and your supervisors at work. (1 Tim 2:1-2)
- The fourth finger is usually the weakest. Pray for those who are in trouble or who are suffering (James 5:13-16)
- Then comes your little finger. It reminds of your smallness in relation to God's greatness. Ask Him to supply all your needs. (Philippians 4:6,19)

So let us decide to spend more time in the presence of God in this New year and received many more blessing as individuals, as a family and church. God Bless You.

In Chirist

Sis . *Pricilla Amos*

## கடந்த மாத நிகழ்வுகளில் சில உங்கள் பார்வைக்கு











# சபையோருக்கு
# 2020 ஆம் ஆண்டின்
# இனிய
# புத்தாண்டு வாழ்த்துக்கள்

உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

செயற்குழு உறுப்பினர்கள்

சபை ஊழியர் – சகோ. ஸ்டாலின்

66021072

செயலாளர் – சகோ. ஆரோக்கியதாஸ்

99870126

பொருளாளர்– சகோ. எபநேசர்

23922058 - 50203472

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி . பியூலா ஜெகநாதன்

60797360

வாலிப ஐக்கிய தலைவர் –

சகோ. ஆரோக்கியராஜ்

66159784

Church Website Address - ahmaditamilcongregation.org

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only